சார்பு நீதிமன்றம். அருப்புக்கோட்டை.
முன்னிலை: திரு.R.சதீஷ், M.L.,
சார்பு நீதிபதி. அருப்புக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் நாள் திங்கட்கிழமை

**அ.வ.எண்.240/2025**
CNR.No.TNVR13-000557-2025

1. விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், மண்டபசாலை உள்கடை, ரெட்டியபட்டி கிராமம், தெற்குத் தெரு, க.எண்.7/5 என்ற முகவரியில் வசிக்கும் லேட்.சொக்கராஜ் மனைவி, சுமார் 68 வயதுள்ள விஜயா.
2. ஆந்திரா மாநிலம், நெல்லூர் தாலுகா, ஆதித்தியா கல்லூரி அருகில் உள்ள ஆதித்தியா நகர் 4 வது குறுக்குத் தெரு, முதல் தளம் க.எண்.27.1.132 என்ற முகவரியில் வசிக்கும் லேட்.சொக்கராஜ் மகன், சுமார் 48 வயதுள்ள நாகராஜ்
3. திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர், காந்தி தெரு, க.எண்.7 என்ற முகவரியில் வசிக்கும் லேட்.சொக்கராஜ் மகள், சுமார் 46 வயதுள்ள வனஜா
4. காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கம், இந்திய புள்ளிஸ்கிரேஎன்ஸ் அருகில், ஏஜ்னே கிரேஎன்ஸ் பேஸ் II, பிளாட் 908 டவர் டீ-1 என்ற முகவரியில் வசிக்கும் லேட்.சொக்கராஜ் மகன், சுமார் 43 வயதுள்ள ரவிக்குமார்.

... வாதிகள்

– எதிர் –

1. வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், ம.ரெட்டியபட்டி, அருப்புக்கோட்டை தாலுகா, விருதுநகர் மாவட்டம்.
2. வருவாய் வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.
3. வருவாய் கோட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலகம், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.
4. தமிழ்நாடு அரசு அதன் பிரதிநிதியான விருதுநகர் மாவட்ட ஆட்சியர் மூலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலம்.

... பிரதிவாதிகள்

தாவாச் சொத்தானது வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யக்கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தினை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதை 1 முதல் 4 பிரதிவாதிகள் எந்த வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் மற்றும் வழக்கின் செலவுத் தொகை கோரியும் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| வழக்கு தாக்கல் நாள் | : | 21.07.2025, 23.07.2025 |
| நீதிமன்றக் கட்டணம் | : | தாவா சொத்தை ரூ.1,20,686/-ஆக மதித்து அதில் பாதி ரூ.60,343/-க்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டண சட்டம் பிரிவு 25(b)-ன் படி ரூ.1,811/- நீதிமன்றக் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. |
| வழக்கு மூலம் | : | 13.09.2006 மற்றும் 31.03.2025 ஆகிய தேதிகளில் ரெட்டியபட்டி கிராமத்தில் வைத்து உற்பத்தி. |

இவ்வழக்கு 08.06.2026ம் தேதி அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.மோகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் அரசு வழக்கறிஞர் மூலம் இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த போதிலும், 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும், வாதி தரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

## தீ ர் ப் பா ணை

1. வழக்கு அனுமதிக்கப்படுகிறது.
2. தாவா சொத்து வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக தாவா சொத்தை வாதிகள் அமைதியாக அனுபவம் செய்து வருவதற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என்று 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்படுகிறது.
3. செலவுத்தொகை இல்லை.

### செலவுத் தொகை விபரம்

(இருதரப்பிலும் செலவுத்தொகை விபரம் தாக்கல் இல்லை)

### சொத்து விபரம்

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், மண்டபசாலை உள்கடை, ரெட்டியபட்டி கிராமத்தில் சுப்பம்மாள் வகையறா பாகத்துக்கும் மேற்கு, தென்வடல் 6 அடி அகலமுள்ள தபசில் கண்ட நிலத்தில் நம்மாள் போடப்பட்ட கிழமேல் பாதைக்கும் தெற்கு, ஊர் பொது இடத்துக்கும் கிழக்கு, சங்கையா ரெட்டியார் கொல்லைக்கும் வடக்கு, இதற்குள்ளான கிழமேல் ஜாதியடி 51 தென்வடல் ஜாதியடி 21 சேர்த்து மொத்தம் 1071 சதுரடி அளவுள்ள கொல்லை இடம் 1 ஒன்று. இதன் ப.நத்தம் சர்வே எண்.165/3 ஆகும். இதன் புதிய நத்தம் சர்வே எண்.588/4 ன் பகுதியாகும். இதில் அமைந்துள்ள அஸ்பெஸ்டாஸ் செட்டும் அடங்கும்.

தாவா சொத்தின் மதிப்பு (1071 சதுரடி x ரூ.66/–) = ரூ.70,686/–ம் அதில் அமைந்துள்ள கட்டுமானத்தின் மதிப்பு ரூ.50,000/–ம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.1,20,686/– ஆகும்.

2026 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாளன்று என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

SATHISH Digitally signed by SATHISH

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

-----------------------------------

தீ ர் ப் பா ணை

OS.**No.240/2025**

நாள்: 08.06.2026

சார்பு நீதிமன்றம்,

அருப்புக்கோட்டை

-----------------------------------